TNTP120002332019

Presented on : 03-10-2019
Registered on : 03-10-2019
Decided on : 30-07-2024
Duration : 4 years, 9 months, 27 days

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்

முன்னிலை திரு. இரா. சத்தியமூர்த்தி, எல்.எல்.எம்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, துறையூர்

2024ம் ஆண்டு ஜீலை திங்கள் 30ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண்.163/2019**

**CNR No.TNTP12-000233-2019**

வெங்கடேஷ் ...வாதி

/எதிராக/

சுப்புலட்சுமி ...பிரதிவாதி

தாவா சொத்துக்களில் வாதியின் சுவாதீனத்தையும் அனுபோகத்தையும் இப்பிரதிவாதியும் அவரது ஆட்களும் அத்துமீறி நுழைந்து வாதியின் சுவாதீனத்தையும் அனுபோகத்தையும் இடைஞ்சல் செய்யாமலிருக்க ஓர் நிரந்தர உறுத்துக்கட்டளைக்கு தீர்ப்பு வழங்கவும் மற்றும் வழக்கு செலவு வாதிக்கு பிரதிவாதியால் கிடைக்கவும் இவ்வழக்கு தாக்கல்.

இவ்வழக்கில் வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.ஆர். செந்தில்குமார் அவர்களும், பிரதிவாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எ. மனோகரன் அவர்களும் ஆஜராகி உள்ளனர்.

இவ்வழக்கு கடந்த 30.07.2024 அன்று என்முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

இன்று இவ்வழக்கானது விசாரணைக்காக போடப்பட்ட போது, வாதி அழைத்தும் ஆஜராகவில்லை. அவரது தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் செய்யவில்லை. பிரதிவாதி சுப்புலட்சுமி ஆஜரானார். கடைசி வாய்தாவிலும் வாதி ஆஜராகவில்லை. இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எழுவினாக்கள் கடந்த 11.07.2023ம் தேதியே வனையப்பட்டது. போதிய காலஅவகாசம் கொடுக்கப்பட்டும் வாதி ஆஜராகவில்லை, பிரதிவாதி இன்றும், கடைசி வாய்தாவிலும் ஆஜராகியுள்ளார். மேற்கண்டவற்றை கருத்தில் கொண்டு, இவ்வழக்கானது வாதியின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்படுகிறது.

2024ம் ஆண்டு ஜீலை திங்கள் 30 ஆம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் முன் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-இரா.சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி.
துறையூர்.

<u>Visit **ecourts.gov.in** for updates or download mobile app “**eCourts Services**” from Android or iOS</u>